**தலைப்பு 102 – நிதி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 102 – நிதி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 10 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 3,630.11 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,273.12 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,357 மில்லியன் அதாவது 65 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 573.13 | 571.16 | 1.97 | 0.34 |
| மூலதனம் | 3,056.99 | 701.96 | 2,355.03 | 77.04 |
| மொத்தம் | 3,630.12 | 1,273.12 | 2,356.99 | 64.93 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

அமைச்சிற்குரிய விடய இலக்கம் 10201 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 15.39 | 10.07 | 9.50 | 11.87 | 70.00 | 44.18 |

**2.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

நிதி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் சேவையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 920,947 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 13 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.2 கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

நிதி அமைச்சிற்கு சட்டரீதியான உரித்து கையேற்கப்படாதிருந்த டைமஸ் கட்டிடத்தில் தனியார் கம்பனியொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனியால் கட்டிடத்தின் ஒரு பகுதி வேறொரு தனியார் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கியமையால் 2013 ஒக்தோபர் மாதம் முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்திற்குரிய ரூபா 9,450,000 வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது. திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய அவ்வருமானம் வெளித்தரப்பினர் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**3.3 தீர்க்கப்படாத பொறுப்புகள்**

டைமஸ் கட்டிடத்திற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்தவேண்டிய ஆதனவரி ரூபா 5,061,052 தொகை 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை** | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 ஆம் பிரிவு | நிரல்படுத்தப்பட்ட வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தின்றிய உத்தியோகத்தரொருவர் அரசாங்கத்தின் வீடொன்றில் குடியிருந்து வருவதன் காரணமாக திருமணமான உத்தியோகத்தரொருவரின் சம்பளத்தில் 12 ½ சதவீதம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 02 வீடுகளைப் பெற்ற உத்தியோகத்தர்களின் சம்பளத்தில் 10 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமையால் மாதாந்தம் ரூபா 1,679 தொகை அரசாங்கத்தினால் இழக்கப்பட்டிருந்தது. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 ஆம் பிரிவு | அரசாங்க சேவையில் உள்ள கணவனும் மனைவியும் அரசாங்க வீடொன்றில் குடியிருக்கும் போது நிரல்படுத்தப்பட்ட வீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தற்றிருப்பின் அந்த இருவரிலும் கூடிய சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தரின் சம்பளத்தில் 12 ½ சதவீதமும் குறைந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தரின் சம்பளத்தில் 5 சதவீதமும் அறவிடப்பட வேண்டிய போதிலும், உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்ற 03 உத்தியோகத்தர்களின் துணைவியர்கள் அரசாங்க சேவையில் ஈடுபட்டிருக்கின்ற போதிலும், அவர்களின் சம்பளத்தில் 5 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) XIX ஆம் அத்தியாயத்தின் 6.12 ஆம் பிரிவு | குடியிருந்து வரும் காலம் மிகவும் விஷேட சந்தர்ப்பங்களின் போது நீடிப்பதற்கு வீட்டினை ஒதுக்கும் அதிகாரத்தரப்பினருக்கு முடியுமாக இருந்த போதிலும், அவ்வாறு நீடிக்காமல் உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருந்து வருகின்றனர். |
| (iv) XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவு | வாடகைக் காலத்தை விஞ்சி வீடொன்றில் குடியிருக்கின்ற காலப்பகுதிக்காக உத்தியோகத்தரின் சம்பளத்தில் 8 சதவீதம் மற்றும் பிரதான விலை மதிப்பீட்டாளரினால் அந்த வீட்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட |

அப்போதைய திறந்த சந்தை வாடகை என்பவற்றை சேர்த்து பெறப்படுகின்ற தொகையான தண்ட வாடகை, வீட்டைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் 8 உத்தியோகத்தர்களிடமிருந்து அவ்வாறு தண்ட வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5 செயலாற்றல்

இசிபத்தன வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணத்திற்காக 2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 270,000,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் 2015 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 வழிகாட்டியின் பிரகாரம் பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்காக தேசிய ரீதியில் போட்டிக் கேள்வியொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அமைச்சு 2015 ஆம் ஆண்டில் பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்காக போட்டியாளர் கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் சகல தொடர்புடைய செலவினங்களையும் உள்ளடக்கிய மொத்தக் கிரய மதிப்பீடு கொள்வனவு நிறுவனத்தால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தயாரிக்கப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2014 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியில் பாதுகாப்பு சேவைக்காக தனியார் பாதுகாப்பு கம்பனியொன்றிற்கு மாதாந்தம் ரூபா 909,883 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது அந்தச் சேவை அரசாங்க வங்கியொன்றினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலுத்தப்பட்ட மாதாந்த சராசரி செலவினம் ரூபா 2,396,906 ஆகும். பாதுகாப்பு சேவை வழங்கும் நிறுவனம் மாற்றப்பட்டமையினால் 2015 ஆம் ஆண்டின் போது மாதாந்தம் ரூபா 1,487,023 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்கள் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 35 | 23 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 32 | 11 | 21 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 85 | 81 | 04 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 108 | 118 | - | 10 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 05 | 01 | 04 | - |
| | மொத்தம் | 265 | 234 | 41 | 10 |

**3.9 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 21 ஆந் திகதி திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

**3.9.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**3.9.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு

நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் குடியரசினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி குடியரசின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 3.9.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 3.10 நிதிக்கூற்றுக்கள்

### 3.10.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 3.10.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 3.10.2 நிதிசார் செயலாற்றல்

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிசார் செயலாற்றல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| 2015 ஆம் ஆண்டின் திருத்திய பாதீட்டு மதிப்பீடு | | 2015 | 2014 |
|---|---|---|---|
| ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| | **வருமானம்** | | |
| 252,600.0 | வருமான வரி | 262,583.4 | 198,114.6 |
| 790,740.0 | உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவை வரி | 756,109.0 | 556,002.7 |
| 249,360.0 | சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையிலான வரி | 263,428.2 | 233,808.0 |
| **1,292,700.0** | **வரி வருமானம்** | **1,282,120.6** | **987,925.3** |
| **147,950.0** | **வரியல்லாத வருமானமும் ஏனையவையும்** | **112,124.8** | **139,706.1** |
| **1,440,650.0** | **வருமானங்களின் மொத்தம்(அ)** | **1,394,245.4** | **1,127,631.4** |
| | **கழி: செலவினம்** | | |
| 432,436.8 | சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய சேவை நலன்கள் | 429,742.3 | 333,860.1 |
| 177,254.4 | ஏனைய பொருட்களும் சேவைகளும் | 162,965.7 | 176,808.2 |
| 630,565.6 | உதவுதொகைகள் மானியங்கள் மற்றும் மாற்றல்கள் | 552,848.7 | 412,601.4 |
| 529,572.9 | வட்டிக் கொடுப்பனவு | 527,227.6 | 446,393.0 |
| 6,403.7 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 137.2 | 383.2 |
| **1,776,233.4** | **மொத்த மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத்தொகை (ஆ)** | **1,672,921.5** | **1,370,045.9** |
| **335,583.4** | **வருமானக் குறை** (அ) – (ஆ) | **278,676.1** | **242,414.6** |
| 835,396.8 | **அரச முதலீடுகள்** | 683,963.4 | 595,710.6 |
| **1,170,980.2** | **பாதீட்டுப் பற்றாக்குறை** | **962,639.5** | **838,125.2** |
| | **பாதீட்டு பற்றாக்குறைக்கான நிதியீட்டம்** | | |
| 321,637.3 | வெளிநாட்டுக் கடன் பெறுவனவு | 556,370.3 | 422,543.0 |
| (204,085.1) | வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்தல் | (187,112.8) | (106,979.2) |

| | | | |
|---|---|---|---|
| **117,552.2** | **தேறிய வெளிநாட்டு கடன் பெறுவனவு** | **369,257.5** | **315,563.7** |
| 17,950.5 | வெளிநாட்டு மானியங்கள் | 6,013.9 | 9,415.0 |
| -------------- | | --------------- | --------------- |
| **135,502.7** | **மொத்த வெளிநாட்டு நிதியீட்டப் பங்களிப்பு** | **375,271.4** | **324,978.8** |
| 1,701,642.4 | உள்நாட்டு வங்கியல்லாக் கடன் பெறுவனவு | 1,187,230.9 | 965,449.4 |
| (659,696.0) | உள்நாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துதல் | (659,282.3) | (528,987.3) |
| -------------- | | --------------- | --------------- |
| **1,041,946.4** | **தேறிய உள்நாட்டு கடன் பெறுவனவு** | **527,948.6** | **436,462.1** |
| 14,000.0 | கடன் அறவீடு | 12,960.8 | 14,892.4 |
| 350.0 | மூலதனச் சொத்து விற்பனை | 97.9 | 17,604.4 |
| - | வைப்புக் கணக்குள் மற்றும் பொறுப்புக்களில் தேறிய மாற்றம் | 13,053.6 | 16,916.6 |
| - | காசு மற்றும் அதற்குச் சமமானவற்றின் அதிகரிப்பு/ (குறைவு) | 33,307.2 | 27,271.0 |
| ------------- | | --------------- | --------------- |
| **1,191,799.1** | **மொத்த நிதியீட்டத்தின் கூட்டுத்தொகை** | **962,639.5** | **838,125.2** |
| ======= | | ======= | ======= |

### 3.10.3 நிதி நிலைமை

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஒப்பீடு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | |
|---|---|---|
| | **2015** | **2014** |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| **நிதியல்லாச் சொத்துக்கள்** | **21,287.3** | - |
| **நிதிச் சொத்துக்கள்** | | |
| அரச உத்தியோகத்தர்களுக்கான கடன் | 22,326.7 | 23,396.3 |
| அரச திணைக்களங்களுக்கான முற்பணம் | 9,878.0 | 9,679.0 |
| அங்கத்துவ கட்டணம் | 3,517.2 | 3,517.2 |
| கடன் வழங்கல் | 174,196.1 | 207,966.0 |
| அரசாங்கத்தின் வசமுள்ள வியாபாரங்களில் அரசின் பங்களிப்பு | 492,129.9 | 397,837.3 |
| கடன் பெறுவனவு அடிப்படையிலான முதலீடு | 7,684,953.7 | 6,577,431.5 |
| முத்திரை இருப்புக் கணக்கு | 1,315.2 | 1,244.4 |
| | ------------ | ------------ |
| **நிதிச் சொத்துக்களின் கூட்டுத்தொகை** | **8,388,316.8** | **7,221,071.8** |
| | ------------- | ------------- |
| **மொத்த சொத்துக்கள்** | **8,409,604.1** | **7,221,071.8** |
| | ======== | ======== |

**நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள்**

| | | |
|---|---|---|
| திரண்ட நிதியம் | (403,025.5) | (356,664.8) |
| எதிர்பாரா சந்தர்ப்ப நிதியம் | 100.0 | 140.0 |
| வெளிநாட்டுக் கடன் சுழற்சி நிதியம் | 25,747.6 | 25,835.3 |
| அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் அரசாங்கத்தின் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்ட முதலீடு | 666,326.0 | 605,803.4 |
| நானாவித நிதியம் | 1,397.0 | 1,284.8 |
| நடைமுறையல்லாச் சொத்துக்களின் ஒதுக்க நிதியம் | 21,287.3 | - |
| **மொத்த நிதியம்** | **311,832.4** | **276,398.7** |

**பொறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| வங்கி மேலதிகப் பற்று | 197,655.0 | 164,347.8 |
| மத்திய வங்கி முற்பணம் | 151,131.7 | 143,898.0 |
| அரசின் கடன் பெறுவனவு | 7,684,953.7 | 6,577,431.5 |
| வைப்புக்களும் ஏனைய பொறுப்புக்களும் | 63,142.4 | 62,723.5 |
| அரச திணைக்களங்களுடனான செயற்பாட்டுக் கணக்கு | 277.0 | (4,315.0) |
| நானாவிதக் கணக்குகள் | 611.9 | 587.3 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **8,097,771.7** | **6,944,673.1** |
| **மொத்த பொறுப்புக்களும் நிதியங்களும்** | **8,409,604.1** | **7,221,071.8** |
| **எதிர்பாராதவைகளும் கடப்பாடுகளும்** | **431,954.3** | **519,273.9** |

**3.10.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மெற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீடு அதிகாரச்சட்டத்தின் 2(1)(ஆ) பிரிவின்படி 2015 ஆம் ஆண்டின் போது அரசிற்காக அரசாங்கத்திற்குரிய சட்டங்களின் படி ரூபா 1,780,000 மில்லியன் தொகையை விஞ்சாத வகையில் கடன் பெற்றுக்கொள்ள முடியுமான போதிலும், குடியரசின் நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களாக ரூபா 3,349,805 மில்லியன் பெறப்பட்டிருந்தது. அதன்படி 2015 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை ரூபா 1,569,805 மில்லியனால் விஞ்சியிருந்தது. அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் போது பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட கடன் எல்லை ரூபா 1,164,775 மில்லியனால் விஞ்சியிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 7,684,954 ஆக இருந்த போதிலும், தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட

பின்வரும் அவதானிப்புக்களின் தாக்கத்தின் காரணமாக அந்தக் கடன் மீதி ரூபா 1,025,180 மில்லியன் தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(i) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திறைசேரி பிணை முறிகளின் முகப் பெறுமதி (Face Value) ரூபா 3,695,541 மில்லியனாக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அந்த மீதி ரூபா 508,763 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திறைசேரி உண்டியல்களின் முகப் பெறுமதி (Face Value) ரூபா 663,285 மில்லியனாக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அந்த மீதி ரூபா 30,000 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) வெளிநாட்டுக் கடன் வழங்குகின்ற நிறுவனங்களுடன் அரசாங்கம் கைச்சாத்திட்ட 07 உடன்படிக்கைகளுக்குரிய 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் குடியரசினால் செலுத்த வேண்டிய ரூபா 338,141 மில்லியன் கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தேசிய பாதீட்டு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக் குத்தகை பொறுப்புக்கள் ரூபா 19,376 மில்லியாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் 2014 ஆம் ஆண்டு முதல் நிதிக் குத்தகை முறையின் கீழ் பெறப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களுக்கான பொறுப்புக்கள் ரூபா 13,807 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) அரசாங்க பாதுகாப்பு அமைச்சினால் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் 04 உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 7,550 மில்லியன் தொகையான கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அமைச்சொன்றினால் அரசாங்கத்தின் பிணையுடன் உள்நாட்டு வங்கிகளிலிருந்து 2014 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட கடனுக்கான தவணைப்பணம் மற்றும் வட்டியாக மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 2,469 மில்லியன் மற்றும் ரூபா 9,562 மில்லியன் ஆக ரூபா 12,031 மில்லியன் கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்தக் கடன் மற்றும் வட்டி செலுத்துதல் அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 126,919 மில்லியன் தொகையான கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் வட்டியாக ரூபா 527,227 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்களின் தேறிய விளைவின் காரணமாக ரூபா 16,818 மில்லியன் தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(i) திறைசேரிப் பிணை முறிகள் வழங்கலினால் உழைக்கப்பட்ட ரூபா 13,998 மில்லியன் வட்டி வருமானம், வட்டிக் கொடுப்பனவுக் கணக்கில் மிகைக் கட்டணமாக்கியதன் காரணமாக 2015 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வட்டி வருமானம் மற்றும் வட்டிக் கொடுப்பனவு ஆகியன அந்த பெறுமானத்தினால் குறைத்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) முகப் பெறுமதியை விட குறைந்த விலையில் திறைசேரி பிணை முறிகளை வழங்கும் போது பிணை முறிகள் முகப்பெறுமதி பிணைமுறிக் கணக்கில் செலவு வைக்கப்படாது, பிணை முறி விற்பனைப் பெறுமதி மாத்திரம் பிணைமுறியைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன். இதன் காரணமாக அந்த பிணைமுறிகளில் முகப்பெறுமதியை மீளாய்வாண்டின் போது பணம் செலுத்தி விடுவிக்கும் போது ரூபா 40,378 மில்லியன் தொகையான பிணை முறிக் கழிவு, வட்டிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையினால் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட வட்டி ரூபா 40,378 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) வெளிநாட்டு வள திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 854-1 அறிக்கையின்படி மீளாய்வாண்டில் வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி ரூபா 83,063 மில்லியனாக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட குறிப்பு இலக்கம் 08 இன் படி வட்டிக் கொடுப்பனவு ரூபா 77,174 மில்லியனாக இருந்தமையின் காரணமாக ரூபா 5,889 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(iv) அமைச்சொன்றினால் அரசாங்கத்தின் பிணையுடன் வங்கி மூலம் பெறப்பட்ட கடனுக்காக ரூபா 9,562 மில்லியன் வட்டி செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது வட்டிக் கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்படாது அரசாங்க முதலீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக வட்டிக் கொடுப்பனவு ரூபா 9,562 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களின் படி அரசாங்கத்தினால் பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு ரூபா 174,196 மில்லியன் உப கடன் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் அவதானிப்புக்களின் தேறிய தாக்கத்தின் காரணமாக அதன் பெறுமதி ரூபா 2,682 மில்லியன் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(i) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 14 அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய உப கடன் மீதி ரூபா 8,390.8 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனத்தினால் அந்தக் கடன் மீதி ரூபா 7,215.4 மில்லியனாக உறுதிப்படுத்தப்பட்டமையால் அந்த 14 நிறுவனங்களினதும் உப கடன் மீதி ரூபா 1,174.4 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 நிறுவனங்களுக்குரிய உப கடன் பெறுமதி ரூபா 5,726.0 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனங்களினால் அனுப்பப்பட்ட மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் கடன் மீதி ரூபா 9,332.6 மில்லியனாக இருந்தது. அதன் படி அந்த 07 நிறுவனங்களுக்குரிய கடன் மீதி ரூபா 3,606.6 மில்லியன் தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) 2001 ஆம் ஆண்டில் 9 சதவீத வட்டி வீதத்தின் அடிப்படையில் அரச ஈட்டு, முதலீட்டு வங்கிக்கு வழங்கப்பட்ட ரூபா 250 மில்லியன் உப கடன் மற்றும் அதன் படி 2001 அம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்க வேண்டிய வட்டிப் பணமான ரூபா 337 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டில் பிணை முறி வழங்களினால் உழைக்கப்பட்ட வெகுமதி (Premium) நிதிக்கூற்றுக்களில் புறம்பாக வெளிப்படுத்துவதற்குப் பதிலாக திறைசேரி

பிணைமுறிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் திறைசேரி பிணை முறிப் பெறுமதி ரூபா 18,846 மில்லியன் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 556,370 மில்லியன் மற்றும் ரூபா 187,113 மில்லியன் தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்களின் தாக்கத்தின் காரணமாக வெளிநாட்டுக் கடன் பெறுவனவு ரூபா 34,003 மில்லியன் குறைவாகவும் வெளிநாட்டுக் கடன் செலுத்துதல்கள் ரூபா 4,605 மில்லியன் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(i) 07 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2015 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 10,696.7 மில்லியன் கடன் அளவு மற்றும் 2015 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 4,604.7 மில்லியன் வெளிநாட்டுக் கடனின் அளவு என்பன குடியரசின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ii) 41 கடன் உடன்படிக்கைகளுக்குரிய மீளாய்வாண்டின் போது கிடைத்த வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகளிலிருந்து ரூபா 23,306.5 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்தலாக ரூபா 187,113 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் குறிப்பு இல. 30(i) (வெளிநாட்டுக் கடன் மீதிக் கூற்று) இன் படி வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்துதல் ரூபா 174,800 மில்லியன் ஆனமையால் ரூபா 12,313 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது.

(எ) நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட அரசாங்கத்தினால் பல்வேறு பொது முயற்சிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுமதி ரூபா 492,192 மில்லியன் ஆக இருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளின் தேறிய தாக்கத்தின் காரணமாக அந்தப் பெறுமதி ரூபா 105,068 மில்லியன் குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(i) வரையறுக்கப்பட்ட ஹோட்டல் டிவலபர்ஸ் (லங்கா) கம்பனிக்கு கையளிக்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியின் மூலதனப் பெறுமதி ரூபா 7,000 மில்லியன் ஆக இருந்த போதிலும் அந்தப் பெறுமதி நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொதுத்திறைசேரியினால் தனியார் கம்பனியொன்றில் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 100 மில்லியன் மூலதனப் பங்களிப்பு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிக்கூற்றுக்களின் படி அரசாங்கத்திற்குச் சொந்தமான 129 தொழில்முயற்சிகளில் 06 தொழில்முயற்சிகளுக்குரிய ரூபா 305,152 மில்லியன் கூட்டுத்தொகை பொதுத்திறைசேரியின் மூலதனப் பங்களிப்பாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனத்தினால் மூலதனப் பங்களிப்பாக ரூபா 339,069 மில்லியன் கூட்டுத்தொகை நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையினால் அந்த 06 தொழில்முயற்சிகளுக்குரிய ரூபா 33,917 மில்லியன் கூட்டுத்தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) நிதிக்கூற்றுக்களின்படி அரசாங்கத்திற்குச் சொந்தமான 129 தொழில்முயற்சிகளில் 02 நிறுவனங்களுக்குரிய ரூபா 349 மில்லியன்

கூட்டுத்தொகை பொதுத்திறைசேரியின் மூலதனப் பங்களிப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பொதுத் திறைசேரியினால் உரிய நிறுவனத்தின் மூலதனத்திற்காக முதலீடு செய்யப்படாதிருந்ததாக மீதி உறுதிப்படுத்தல்களின்படி உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ரூபா 349 மில்லியன் பெறுமதியொன்று நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) 2015 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் திறைசேரி பிணை முறி வழங்கல்களின் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் ரூபா 50,500 மில்லியன் தொகையும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையில் ரூபா 13,900 மில்லியன் தொகையும் மூலுதனத்திற்கு பங்களிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தப் பெறுமதி 2015 ஆம் ஆண்டின் குடியரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பிரதான வருமானம் உழைக்கும் மூன்று அரசாங்க நிறுவனங்களுக்குரிய மீளாய்வாண்டின் நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகையான ரூபா 55,408 மில்லியன் ஆக இருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவினால் நிதி அமைச்சின் பிணையின் அடிப்படையில் தாமதரைக் கோபுர வெளிசமிக்ஞை மற்றும் தொலைத் தொடர்பு கோபுர நிர்மாணத்திற்காக 2012 ஆம் ஆண்டின் போது அமெரிக்க டொலர் 104.3 மில்லியன் அல்லது ரூபா 15,238 மில்லியன் தொகையான வணிகக் கடனொன்று வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழத்தக்க பொறுப்புக்கள், குடியரசின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் கிங்னில்வலா ஆற்றைத் திருப்பும் செயற்திட்டத்திகாக மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் முறையே ரூபா 3,012 மில்லியன் மற்றும் ரூபா 999 மில்லியனுமாக ரூபா 4,011 மில்லியன் கூட்டுத்தொகை முற்பணமாக வெளிநாட்டுக் கம்பனியொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது 198-2-3-18-2502 செலவின விடயத்தின் கீழ் ரூபா 40 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த எல்லை ரூபா 2,972 மில்லியனால் விஞ்சி ரூபா 3,102 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் இறுதியில் குடியரசின் நிதிக்கூற்றுக்களில் 8533 ஆம் இலக்க தொங்கல் கணக்கின் மீதி ரூபா 400 மில்லியனாக இருந்ததுடன் அந்த மீதியில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கு வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்ட தொகையும் உள்ளடங்கியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த செலவினத்திற்காக நிதி ஏற்பாட்டைப் பெற்று கணக்கீடு செய்து மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக 8233 ஆம் இலக்க தொங்கல் கணக்கில் ரூபா 1,269 மில்லியன் செலவு மீதியொன்று காணப்பட்டதுடன் அந்த மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் திருத்திய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி பாதீட்டு நிலுவை ரூபா 1,170,980 மில்லியன் ஆக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10.47 சதவீதமாக இருந்தது. 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் 3(அ) ஆம் பிரிவின் படி மதிப்பிடப்பட்ட பாதீட்டு நிலுவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு குறைவாக இருக்க வேண்டிய போதிலும், அந்த எல்லையினை விஞ்சி பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

### 3.10.5 வங்கி மேலதிகப்பற்று

மீளாய்வாண்டின் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 197,655 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் உள்ளடக்கம் பின்வருமாறு இருந்தது.

(அ) திறைசேரி பிரதி செயலாளரினால் பேணப்படுகின்ற 11 வங்கிக் கணக்குகளுக்கிடையே 02 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 204,760 மில்லியன் வங்கி மேலதிகப்பற்று மீதி காணப்பட்டதுடன் அந்த மீதியில் சாதகமான வங்கி மீதியான ரூபா 11,224 மில்லியன் தொகை கழிக்கப்பட்டதன் பின்னர் பெறப்பட்ட மேலதிகப்பற்று மீதி ரூபா 193,536 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மீதியில் கட்டுநிதி மீதியை உள்ளடக்கிய வைப்புக் கணக்குகளிலிருந்து தோற்றம் பெற்ற 8 கணக்குகளுக்குரிய ரூபா 25,440 மில்லியன் கூட்டுத்தொகையான வரவு மீதியும் கணக்கொன்றிற்குரிய ரூபா 29,560 மில்லியன் செலவு மீதியும் சீராக்கப்பட்டிருந்தமை கணக்குக் குறிப்பு இலக்கம் 28 இன் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் சரியான வங்கி மேலதிகப்பற்று மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 204,760 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் காணப்பட்ட சரியான வங்கி மேலதிகப்பற்று மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 189,461 மில்லியனால் இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டினைவிட வங்கி மேலதிகப்பற்று மீதி 8.08 சதவீதத்தினால் அதாவது ரூபா 15,299 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(இ) வருடாந்தம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி மேலதிகப் பற்றுக்காக செலுத்துவதற்கு ஏற்பட்ட மேலதிகப்பற்று வட்டி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 11,086 மில்லியனாக இருந்தது.

### 3.10.6 பொது வைப்புக் கணக்கு

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி பொது வைப்புக் கணக்கின் தேறிய செலவு மீதி ரூபா 62,756 மில்லியனாக இருந்ததுடன் அது ரூபா 62,901 மில்லியன் செலவு மீதியில் ரூபா 145 மில்லியன் வரவு மீதி சீராக்கப்பட்டதன் பின்னர் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.10.7 நட்டமும் இழப்பும்

2015 ஆம் ஆண்டின் நட்டமும் இழப்பும் பதிவழித்தலாக ரூபா 138 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் நட்டம் மற்றும் இழப்பாக பதிவழித்தல்களின் கூட்டுமொத்தமான ரூபா 383 மில்லியனை விட ரூபா 245 மில்லியனால் குறைவடைந்திருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 14 செலவினத் தலைப்புக்களுக்குரிய ஒதுக்கீட்டுக் கணக்குகளின் பிரகாரமும் நிதிப்பிரமாணம் 106 மற்றும் நிதிப் பிரமாணம் 113 இன் பிரகாரமும் கூட்டுமொத்தமாக ரூபா 62 மில்லியன் நட்டம் மற்றும் இழப்புக்கள் குடியரசின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் பதிவழிக்கப்பட்டிருந்த நட்டம் மற்றும் இழப்புக்களின் பெறுமதி ரூபா 18 மில்லியனாக இருந்த போதிலும் அந்த நட்டமும் இழப்பும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.10.8 நிலையான சொத்துக்களை கணக்கு வைத்தல்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாச் சொத்தாக ரூபா 21,287 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் சில மாவட்டச் செயலகங்களுக்குரிய கட்டிடங்கள், இயந்திரமும் உபகரணங்களும், காணி, புத்துருவாகும் கட்டிடங்கள் மற்றும் குத்தகை வாகனங்கள் என்பன குறிப்பிடப்பட்டிருந்தன. இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை 1 இல் குறிப்பிடப்பட்டிருந்த மேற்கூறப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களினால் குறிப்பிடப்பட்ட சொத்துக்களைத் தவிர ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களுக்குரிய நடைமுறையல்லாச் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10.9 அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளில் மூலதனப் பங்களிப்பு

மீளாய்வாண்டின்போது 7 நிறுவனங்களிற்காக அரசினால் ரூபா 94,333 மில்லியன் தொகையையும் உள்ளடக்கி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான 129 தொழில் முயற்சிகளுக்காக ரூபா 492,130 மில்லியன் மொத்த மூலதனம் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட முதலீடு மொத்த முதலீட்டுப் பெறுமதியில் 19 சதவீதமாக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச மற்றும் அரசல்லாத 45 கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 22,289 மில்லியன் பெறுமதியான பங்குச் சான்றிதழ்களுக்குரிய தகவல்கள் 2015 திசெம்பர் 08 ஆந் திகதிய TOD/CM/3/1/8 வெலும(iii)(ஆ) ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட மெய்மையாய்வுச் சபை சமர்ப்பித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் சகல பங்கு முதலீடுகளின் சரியான தன்மை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அந்த பங்குகளின் முதலீட்டுப் பெறுமதியை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 20 கம்பனிகளுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 115,635 மில்லியன் தொகை பொதுத் திறைசேரியினால் மூலதனத்திற்குப் பங்களித்திருந்தமை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் அந்தக் கம்பனிகளின் முதலீட்டுப் பெறுமதி ரூபா 44,641 மில்லியனாக இருந்தது. அந்த 20 கம்பனிகளுக்குரிய ரூபா 70,994 மில்லியன் கூட்டுத் தொகை நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டின் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,508.7 மில்லியன் 3 கம்பனிகளின் பங்கு மூலதனத்திற்கு பங்களித்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் குடியரசின் நிதிக்கூற்றுக்களில் அந்த மூலதனம் பங்களிப்பு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.10.10 வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானியம்

மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானியமாக முறையே ரூபா 250,687 மில்லியன் தொகை மற்றும் ரூபா 18,334 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் வெளிநாட்டுக் கடனுக்காக ஆரம்ப மதிப்பிடு ரூபா 321,637 மில்லியன் வரை ரூபா 70,951 மில்லியனால் அதிகரித்து, வெளிநாட்டு மானியத்திற்கான ஆரம்ப மதிப்பீடு ரூபா 17,951 மில்லியன் வரை ரூபா 16,117 மில்லியனால் குறைத்து திருத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின்போது கடன் கொடுப்பனவுகளைக் கணிப்பீடு செய்யும் போது 4 கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 9 மில்லியன் தொகை குறைத்தும் மற்றும் 4 கடன் உடன்படிக்கைகளுக்குரிய ரூபா 18 மில்லியன் அதிகரித்தும் குடியரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கடன் பணம் கிடைத்திராத 5 கடன் உடன்படிக்கைகளுக்குரிய வட்டியாக ரூபா 122 மில்லியன் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் (Other Payments) ஆக ரூபா 647 மில்லியன் 2015 ஆம் ஆண்டின்போது செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 316,909 நிதி ஏற்பாடு வெளிநாட்டுக் கடன்களிலிருந்து நிதியீட்டம் செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது அந்த நிதியீட்டத்தின் கீழ் ரூபா 252,591 நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 64,318 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2015 ஆம் ஆண்டின் வெளிநாட்டுக் கடனாக ரூபா 556,370 மில்லியன் கிடைத்திருந்த போதிலும், அந்த மொத்த கடன் பணமும் பயன்படுத்தக்கூடிய வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் வெளிநாட்டு மானியங்களின் மூலம் நிதியீட்டம் செய்வதற்கு எதிர்பார்த்து மூலதன செலவின விடயத்திற்காக ரூபா 17,905 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 5,541 மில்லியன் பயன்படுத்தப்பட்டமையினால் ரூபா 2,364 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 31 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(உ) 17 தலைப்புக்களின் கீழ் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு ரூபா 9,337 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமையினால் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் நாடுகளிலிருந்தும் கிடைத்திருந்த ரூபா 112 மில்லியன் வெளிநாட்டு மானியங்கள் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.10.11 முற்பணக் கணக்குகள்**

2015 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தின் மூலம் 32302 ஆம் விடய இலக்க சிறைச்சாலைகள் கைத்தொழில் மற்றும் கமத்தொழில் அலுவல்கள் தொடர்பான முற்பண செயற்பாடுகளுக்கான ஆகக்கூடிய வரவு மீதியின் எல்லை ரூபா 12.00 மில்லியனாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த எல்லை ரூபா 4.18 மில்லியனால் விஞ்சி ரூபா 16.18 மில்லியன் ஆக இருந்தது.

**3.10.12 உள்நாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உப கடன்கள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசினால் அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உப கடன் மீதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசினால் 18 அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 28,701 மில்லியன் கூட்டுமொத்த உப கடன் மீதிகள் அந்த நிறுவனங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குடியரசின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 20 இல் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசினால் அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த உப கடன் மீதி ரூபா 23,673 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 10 இல் நிதிச் சொத்துக்களைக் கைப்பற்றலின் கீழ் உப கடன் பெறுமதி ரூபா 14,592 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த இரண்டு மீதிகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் தொடர்பாக இணக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசினால் 04 நிறுவனங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 947 மில்லியன் உப கடன்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செலுத்தி முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் அந்தக் கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இரண்டு மாதங்களுக்குள் றியல் எஸ்டேட் எக்ஸ்வேன்ஜ் (தனியார்) கம்பனியைக் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. உரிய கம்பனிக்கு அரசினால் வழங்கப்பட்ட கடன் பணத்தின் நிலுவைத் தவணை மற்றும் வட்டியான ரூபா 276 மில்லியன் என்பவற்றை தீர்ப்பதற்கு 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.11.1 அரசாங்க வருமானம்

மீளாய்வாண்டிற்கான 94 வருமானக் குறியீடுகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி மொத்த வருமானம் ரூபா 1,689,000 மில்லியன் ஆக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் படி அரசாங்கத்தின் மொத்த வருமானம் ரூபா 1,440,650 மில்லியன் வரை ரூபா 248,350 மில்லியனால் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அது ஆரம்ப மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 15 சதவீத அளவாக இருந்ததுடன், மீளாய்வாண்டில் உள்ளபடியான வருமானம் ரூபா 1,394,245 மில்லியனாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் வருமான மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தின் மொத்த திருத்தப்பட்ட வருமானம் ரூபா 1,440,650 மில்லியனாக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் ரூபா 1,394,245 மில்லியனாக இருந்தமையினால் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட இலக்கை ரூபா 46,405 மில்லியனால் அடைய முடியாதிருந்தது.

(ஆ) வருடாந்த வருமான மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிராத 7 வருமானக் குறியீடுகளுக்குரிய ரூபா 50 மில்லியன் வருமானம் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் 13 வருமானக் குறியீடுகளின் உள்ளபடியான வருமான சேகரித்தல் ரூபா 72,647 மில்லியனாக இருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது உரிய வருமானக் குறியீடுகளின் உள்ளபடியான வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 128,436 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் போது உரிய வருமான சேகரித்தல் ரூபா 55,789 மில்லியனால் அதாவது 43 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஈ) இலங்கை மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களம் வருடாந்தம் உழைக்கின்ற வருமானம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படாது மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிதியத்தில் நிறுத்திவைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 1,849 மில்லியனாக இருந்தது. வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளிலிருந்து மிருகக்காட்சிச் சாலைகள் திணைக்களத்தின்

செலவினத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையால் உழைக்கப்படுகின்ற வருமானத்தை அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்தது.

**3.11.2 அரசாங்க செலவினம்**

அரசாங்க நிதிக்கட்டுப்பாட்டிற்குரிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் XVII ஆம் அத்தியாயத்தின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான பூரணமான கட்டுப்பாடு பாராளுமன்றத்திற்குரியதாகும். 2015 ஆம் ஆண்டிற்காக அரசாங்க செலவினங்களுக்குத் தேவையான நிதி ஏற்பாடு 2015 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினாலும் 2015 இன் 01 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 2014 இன் 41 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி 2015 ஆம் ஆண்டின் செலவினத்திற்காக ரூபா 3,475,410 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு இருந்தது.

| நிதியளிப்பு | மூலதன நிதி ஏற்பாடு | மீண்டெழும் நிதி ஏற்பாடு | மொத்த நிதி ஏற்பாடு |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு | 1,232,457 | 868,834 | 2,101,291 |
| நடைமுறையிலுள்ள சட்டங்களின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்ட திரண்ட நிதியத்திற்கு செலவிப் பொறுப்பாக்கப்பட்ட விஷேட சட்ட சேவை செலவினத்திற்கான நிதி ஏற்பாடு | 802,381 | 434,327 | 1,236,708 |
| விசேட சட்டச் சேவைக்காக மேலதிகமாக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு | 17,317 | 120,094 | 137,411 |
| மொத்தம் | 2,052,155 | 1,423,255 | 3,475,410 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அரசின் செலவினத்திற்காக ரூபா 3,475,410 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 2,767,039 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செலவினம் முன்னைய ஆண்டைவிட ரூபா 708,371 மில்லியனால் அதாவது 26 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது 2015 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 3,203,280 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதி ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 272,130 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 7.8 சதவீதமாக இருந்தது.

(ஆ) ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தலைப்பு 240 தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளளிப்பு உதவிச் சேவை மற்றும் அவசரத் தேவை பொறுப்பு செயற்திட்டத்தின் கீழ் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 63,440 மில்லியனும் மூலதன

செலவினத்திற்காக ரூபா 137,856 மில்லியனுமாக ரூபா 201,296 மில்லியன் கூட்டுமொத்தமாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) மீண்டெழும் செலவினத்திற்காக 66 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,630 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாமையினால் அந்த மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக 1,318 செலவின விடயங்களின் கீழ் ரூபா 368,275 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 292,692 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 75,583 மில்லியன் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து 26 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சைக் கொண்டிருந்தது.

(ஈ) 372 மூலதன செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 32,910 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டமையினால் ஆண்டின் இறுதியளவில் அந்த மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 992 மூலதன செலவினவிடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 391,419 மில்லியனை கூட்டுத்தொகையான நிதி ஏற்பாட்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 276,935 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேமிப்பு ரூபா 114,484 மில்லியனாக இருந்தது. அந்த சேமிப்பு செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 26 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.11.3 பாதீட்டு நிலுவை

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் படி பாதீட்டு நிலுவை ரூபா 1,170,980 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் திருத்தப்பட்ட பாதீட்டு நிலுவையை விட ரூபா 394,110 மில்லியனால் அதாவது 51 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின்படி உள்ளபடியான பாதீட்டு நிலுவை ரூபா 962,639 மில்லியனாக இருந்ததுடன் அது மதிப்பீட்டு பாதீட்டு நிலுவையை விட ரூபா 208,341 மில்லியன் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் உள்ளபடியான பாதீட்டு நிலுவை உள்நாட்டு உற்பத்தியில் 8.6 சதவீதமாக இருந்தது.

### 3.11.4 குடியரசின் பொறுப்புக்கள்

குடியரசின் பொறுப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் குடியரசின் மொத்த பொறுப்புக்கள் ரூபா 8,124,917 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் குடியரசின் மொத்த பொறுப்புக்களான ரூபா 6,971,794 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 1,153,123 மில்லியன் அதாவது முன்னைய ஆண்டைவிட 16.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதற்கு பிரதானமாக அரசாங்கக் கடன் பெறுவனவு ரூபா 1,107,522 மில்லியனால் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பொறுப்புக்கள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | வேறுபாடு (குறைவு/ அதிகரிப்பு) | வேறுபாடு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| வங்கி மேலதிகப் பற்று | 197,655 | 164,348 | 33,307 | 20.0 |
| மத்திய வங்கி முற்பணம் | 151,132 | 143,898 | 7,234 | 5.0 |
| வெளிநாட்டு கடன் சுழற்சி நிதியம் | 25,748 | 25,835 | (87) | 0.3 |
| நானாவித நிதியம் | 1,397 | 1,285 | 112 | 9.0 |
| அரசாங்க கடன் கணக்குகள் | 7,684,954 | 6,577,432 | 1,107,522 | 17.0 |
| வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 63,142 | 62,724 | 418 | 0.7 |
| அரசாங்க திணைக்கள பொறுப்புக் கணக்கு | 277 | (4,315) | 4,592 | 106.0 |
| நானாவித கணக்குகள் | 612 | 587 | 25 | 4.0 |
| **மொத்தம்** | **8,124,917** | **6,971,794** | **1,153,123** | **16.5** |

(ஆ) 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) திருத்த அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அரசின் மொத்த பொறுப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தை விஞ்சாதிருக்க வேண்டியிருந்தது. 2015 ஆம் ஆண்டின் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மொத்த பொறுப்புக்கள் ரூபா 8,124,916.4 மில்லியன் பெறுமதியை 2015 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியான ரூபா 11,183,200.0 மில்லியனுடன் ஒப்பீடு செய்த போது அது 72.6 சதவீத அளவினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. எவ்வாறாயினும், பொதுத் திறைசேரியின் பிணைமுறியின் அடிப்படையில் பொது முயற்சிகளினால் பெறப்பட்டுள்ள கடன் மற்றும் அரசினால் பொது முயற்சியாளர்களுக்கு கையளிக்கப்பட்ட கடன் ஆகியன மேற்கூறப்பட்ட பொறுப்புக்களில் உள்ளடக்கப்படாமையினால் இந்த பொறுப்புக்களின் எல்லை மீறப்பட்டிருக்கவில்லை.